குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,
திண்டுக்கல்.

முன்னிலை: திரு.S.பாக்கியராஜ், பி.எஸ்சி, பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.1,
திண்டுக்கல்.
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.673/2025

2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 20-ம் நாள் திங்கள்கிழமை

CNR.No.TNDG03-003576-2025

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
திண்டுக்கல் தாலுகா காவல் நிலையம்,
குற்ற எண். 336/2025 ... குற்ற முறையிடுபவர்

/ எதிர் /

A1- சேசுதாஸ், 18/2025
த/பெ. சவரியார்,
ஞானநந்தகிரிநகர், வேடப்பட்டி, திண்டுக்கல்

A2- சர்புதீன், 20/2025
த/பெ. சதாம் உசேன்,
ஞானநந்தகிரிநகர், வேடப்பட்டி, திண்டுக்கல்

**Case – Summary**

| S.No | Description | Details |
|---|---|---|
| 1. | The Period of remand of the accused | 06.06.2025 – 11.06.2025 |
| 2. | The date of filing of the complaint/final report in the court | 26.06.2025 |
| 3. | The date of committal of the case to the court of sessions | Not applicable. |
| 4. | The date of questioning of the accused under sections 228, 240, 246 and 251 of the code of | 20.07.2026 (S.240 Crpc) |

| | | | | |
|---|---|---|---|---|
| | Criminal procedure, 1973 as the case may be | | | |
| 5. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions under section 317 of the code | - | | |
| 6. | The date of examination – in chief and cross-examination of a witness | Witnesses | Examined in – Chief | Examined - in Cross |
| | | PW1 | 20.07.2026 | 20.07.2026 |
| | | PW2 | 20.07.2026 | 20.07.2026 |
| 7. | The date of examination of the accused under section 313 of the code | 20.07.2026 | | |
| 8. | Details of abscondence of an accused and his appearance/ production, as the case may be | - | | |
| 9. | Grant of stay by superior courts and the results thereof | - | | |

இவ்வழக்கு 26.06.2025 ம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் செல்வி. P. ஜெயபாரதி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>**தீர்ப்புரை**</u>

இவ்வழக்கில் புகார்தாரரின் மகனான சாட்சி சேவியர் ஆல்பர்ட் 1 வது எதிரியிடம் கடந்த 05.06.2025 ம் தேதி மாலை பிரச்சனை செய்ததை மனதில் வைத்துக்கொண்டு இரவு 23.30 மணியளவில் எதிரிகள் இருவரும்

புகார்தாரரின் வீட்டின் முன்பு நின்று கொண்டு சாட்சி சேவியர் ஆல்பர்ட்டை வெளியே கூப்பிட்டு கையால் மாறி மாறி அடித்ததாகவும், விபரம் தெரிந்த இளம்சிறார் ஜான் பீட்டரும் சாட்சி சேவியர் ஆல்பர்ட்டை வீட்டுல அடங்கி கிடக்காம ஊருல போய் வம்பிழுத்து பிரச்சனை செய்து வருவியாடா தாயோழி மகனே என அசிங்கமாக திட்டி அருவருப்பை ஏற்படுத்தி எதிரிகள் மற்றும் சட்டத்திற்கு முரண்பட்ட இளம்சிறார் ஜான்பீட்டர் ஆகியோர் சேர்ந்து சாட்சி சேவியர் ஆல்பர்ட்டை கையால் அடித்தும, கீழே கிடந்த உடைந்த பீர் பாட்டிலை எடுதது காட்டி திரும்ப பிரச்சனை பண்ணா உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்த எதிரிகளின் குற்றச்செய்கையானது சட்டபிரிவு 296(b), 115(2), 351(3) BNS–ன் குற்றமென திண்டுக்கல் தாலுகா காவல் ஆய்வாளரால் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) வழக்கு ஆவணங்களின் நகல்கள் எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான போது குவிமுச 207 வது பிரிவின் கீழ் கட்டணமின்றி வழங்கப்பட்டது.

3) வழக்கு ஆவணங்களின் நகல்கள் குறித்து எதிரிகளுக்கு படித்து பார்க்க போதுமான அவகாசம் வழங்கப்பட்டு, எதிரிகள் மீதான பிரிவுகள் 296(b), 115(2), 351(3) BNS–ன் குற்றம் பற்றி வினவிய போது எதிரிகள் குற்றத்தை மறுத்ததால் எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவு 296(b), 115(2), 351(3) BNS–ன் படி குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கிக்கூறிய போது குற்றவாளிகள் இல்லை என மறுத்ததால் அரசு

தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.2 வரை விசாரிக்கப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**4. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் மற்றும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்.**

i) இவ்வழக்கின் புகார்தாரர் திருமதி. ராசாத்தி என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கபட்டுள்ளார். கடந்த 06.06.2025ம் தேதி சிறப்பு சார்பு ஆய்வாளர் அங்கமுத்து என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது ராசாத்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.336/2025, பிரிவு .296(பி), 115(2), 351(3) BNS ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் அங்கமுத்து சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்சிகள் அப்துல்காதர்ஜெயிலானி, சசிகுமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். சாட்சிகள் 1 முதல் 6 வரை உள்ளவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரிகளை அன்றைய தினம் 16.00 மணிக்கு கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, பின் தனது விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

5. அ.சா.1 ராசாத்தி என்பவர் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். ராசாத்தி என்பவரிடம் புகார் வாக்குமூலமான அ.த.சா.ஆ.1 ஐ பெற்று சிறப்பு சார்பு ஆய்வாளர் அங்கமுத்து அவர்களால் கு.வி.மு.ச பிரிவு 154–ன் கீழ்

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 ராசாத்தி எதிரியுடன் சமாதானம் செய்து கொண்டதாக சாட்சியமளித்துள்ளதாலும், மேலும் சம்பவம் குறித்து அனுசரித்து சாட்சியம் அளிக்காததால் அரசு தரப்பில் சாட்சிகள் தங்கராஜ், சேவியர் ஆல்பர்ட், முத்தையா, அப்துல்லா காதர், சசிக்குமார் ஆகியோர்கள் விசாரிக்கப்படாமல் அரசு தரப்பு வழக்கறிஞர் மூலம் விலக்களிப்பு செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கின் கூடுதல் சாட்சியான சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. நாராயணன் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் புகார் மனுவில் உள்ள கையொப்பம், புகார் மனு, முதல் தகவல் அறிக்கை, பார்வை மகஜர், மாதிரி வரைபடம், ஆகியவைகள் முறையே அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

6. இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமானவற்றை தொகுத்து எதிரிகளிடம் பிரிவு 313(1) (பி) கு.வி.மு.ச–ன் படி வினவியபோது எதிரி அவைகளை மறுத்து, பொய் சாட்சியம் என்று கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறியதால் எதிரி தரப்பு சாட்சியம் முடித்துக்கொள்ளப்பட்டது.

**<u>7. தீர்வுக்குரிய பிரச்சனை</u>**

அரசு தரப்பில் எதிரிகள் மீது பிரிவு 296(b), 115(2), 351(3) BNS–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றமானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதுவேயாகும்.

8. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பது பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது முதலாவதாக இவ்வழக்கின் அடிப்படை ஆவணமான புகார் மனுவினை பரிசீலனை செய்ததில், கடந்த 05.06.2025 ம் தேதி மாலை இரவு 23.30 மணியளவில் எதிரிகள் இருவரும் புகார்தாரரின் வீட்டின் முன்பு நின்று கொண்டு சாட்சி சேவியர் ஆல்பர்ட்டை வெளியே கூப்பிட்டு கையால் மாறி மாறி அடித்ததாகவும், விபரம் தெரிந்த இளம்சிறார் ஜான் பீட்டரும் சாட்சி சேவியர் ஆல்பர்ட்டை வீட்டுல அடங்கி கிடக்காம ஊருல போய் வம்பிழுத்து பிரச்சனை செய்து வருவியாடா தாயோழி மகனே என அசிங்கமாக திட்டி அருவருப்பை ஏற்படுத்தி எதிரிகள் மற்றும் சட்டத்திற்கு முரண்பட்ட இளம்சிறார் ஜான்பீட்டர் ஆகியோர் சேர்ந்து சாட்சி சேவியர் ஆல்பர்ட்டை கையால் அடித்தும, கீழே கிடந்த உடைந்த பீர் பாட்டிலை எடுதது காட்டி திரும்ப பிரச்சனை பண்ணா உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்தனர் என்று அ.சா.1 ன் புகார் மனுவில் சம்பவம் குறித்து கூறப்பட்டுள்ளது.

9. சம்பவத்தைப் பற்றி நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் மனு கொடுத்த அ.சா.1 ராசாத்தி தனது முதல் விசாரணையில் கடந்த 1 வருடம் முன்பு இரவு 11.30 மணிக்கு தான் வீட்டில் இருந்த போது வெளியே சத்தம் கேட்டதாகவும், வெளியே வந்து பார்த்த போது கும்பலாக இருந்ததாகவும், கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளு முள்ளால் தனக்கு காயங்கள் ஏற்பட்டது என்றும், அரசுத் தரப்பிற்கு எதிராகவும், முரணாகவும் சாட்சியம்

அளித்துள்ளதால் அரசுத் தரப்பில் அ.சா.1 ராசாத்தி பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி பெற்று அரசு தரப்பில் அ.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவரது குறுக்கு விசாரணையில் அரசு தரப்பு வழக்கு விவரம் எதுவும் வெளிக்கொண்டு வரப்படவில்லை.

10. சிறப்பு சார்பு ஆய்வாளர் அ.சா.2 நாராயணன் தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி, புகார் மனு பெற்று இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது பிரிவு 296(b), 115(2), 351(3) BNS–ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதை பற்றி ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். ஒத்துரைப்பு செய்யப்படாத அ.சா.2–ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகள்தான் அரசு தரப்பில் சொல்லப்பட்டவாறு குற்றச்செயல்களை செய்தார்கள் என்று தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே அரசு தரப்பில் எதிரிகள்தான் அரசு தரப்பில் சொல்லப்பட்டவாறான குற்றச்செயல்களை செய்தார் என்று சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11. முடிவாக எதிரிகளின் மீதான பிரிவுகள் 296(b), 115(2), 351(3) BNS–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படாததால் எதிரிகள் குற்றவாளிகள்

இல்லை என முடிவு செய்து பிரிவு 271(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

12. இவ்வழக்கில் சொத்துக்கள் எதும் கைப்பற்றப்படாததால் அவற்றை பற்றிய உத்தரவு ஏதும் இல்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு ஜூலை மாதம் 20 ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.07.20 17:24:53 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
திண்டுக்கல்.

**I) அரசு தரப்பு சாட்சிகள்:**

| வ.எண் | சாட்சிகள் | பெயர் |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திருமதி. ராசாத்தி |
| 2 | அ.சா.2 | திரு.நாராயணன் (சார்பு ஆய்வாளர்) |

**II)அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| வ.எண் | சான்றாவணங்கள் | தேதி | விபரம் |
|---|---|---|---|
| 1 | அ.த.சா.ஆ.1 | 06.06.2025 | புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் |
| 2 | அ.த.சா.ஆ.2 | 06.06.2025 | புகார் |

| | | | |
|---|---|---|---|
| 3 | அ.த.சா.ஆ.3 | 06.06.2025 | முதல் தகவல் அறிக்கை |
| 4 | அ.த.சா.ஆ.4 | 06.06.2025 | பார்வை மகஜர் |
| 5 | அ.த.சா.ஆ.5 | 06.06.2025 | மாதிரி வரைபடம் |

III)அரசு தரப்பு சான்று பொருட்கள்: – இல்லை

IV) எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்
மற்றும் சான்றுப் பொருட்கள் – இல்லை

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.07.20 17:25:09 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
திண்டுக்கல்.

V) குறிப்பு:

1)எந்த சாட்சிகளும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை..
2) வழக்கின் முடிவு இரு தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3) எதிரிகள் இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்கள்.